**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2022 - ம் ஆண்டு, நவம்பர் திங்கள், 15 - ம் நாள், செவ்வாய்க்கிழமை.

**வ.வி.எண்.4/2022**

**இன்**

**அசல் வழக்கு எண்.28/2022**

T. ஜெகன் ... வாதி

/எதிர்/

**1.** M. கிருஷ்ணன் நாடார்

**2.** தங்கம் ... பிரதிவாதிகள்

இந்த உத்தரவானது, 14.11.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர். திரு. C.S. லெனின் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர். திரு. R. ஜெயகுமார் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த, இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

**1.** இந்த மனுதாரர்/ வாதியால், கட்டளை 26 விதி 9 - ன் கீழ், நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** வாதி, அசல் வழக்கில், பிரதான பரிகாரமாக ‘B’ ஜாபிதா சொத்து சம்பந்தமாக தடங்கல் ஏற்படுத்துவதாகவும், இடைக்கால உறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை கோரி மனு மற்றும் அசல் பிராது தாக்கல் செய்திருப்பதாகவும், ‘B’ ஜாபிதா சொத்தில், பாதை உள்ளது உள்ளபடி இருக்கக் கோரி, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறி இருக்கிறார். வழக்கிடை விண்ணப்ப மனு எண்.3/2022 இடைக்கால உறுத்துக் கட்டளை கோரும் மனுவில், விசாரணை பகுதியாக மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலையில், தாவா, ‘A’ ஜாபிதா சொத்து மற்றும் ‘B’ ஜாபிதா சொத்து, பிரதிவாதிகள் விற்கிரயம் பெற்று அவகாசப்படுத்தி வைத்துள்ள சொத்துக்கள் மற்றும் வாதி, பிரதிவாதிகளுக்கான பாதை, தாவா சொத்துக்களின் புவியியல் அமைப்பு ஆகியவற்றை இந்த நீதிமன்றத்திற்கு தெரிவிக்கும் வகையில், தேவை கருதி, வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்படுகிறார். வழக்கறிஞர் திரு. C. செல்வ குமார் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்படுகிறார். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்து, வழக்கின் அவசியம் கருதி, தாவா, ‘A’ மற்றும் ‘B’ ஜாபிதா சொத்துக்களை ஆணை பெற்றவுடன், உடனடியாக பார்வையிட்டு, இந்த நீதிமன்றத்தில், இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

**3.** நீதிமன்ற ஆணையர், தகுதி பெற்ற கள அளவையர் உதவியுடன், வழக்கு ‘A’ ஜாபிதா சொத்து மற்றும் வழக்கு ‘B’ ஜாபிதா சொத்து, பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட சொத்துக்கள் மற்றும் மாற்றுப் பாதை ஆகியவற்றை உடனடியாக பார்வையிட்டு அளந்து, புகைப்படம் எடுத்து, வரைபடம் தயாரித்து, இந்நீதிமன்றத்தில் அறிக்கையுடன் தாக்கல் செய்ய பணிக்கப்படுகிறார்.

**4.** வழக்கறிஞர் ஆணையர் கட்டணமாக ரூ.7,500/- நிர்ணயிக்கப்படுகிறது. அந்தத் தொகையினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது. 30.11.2022 அன்று இடைக்கால உத்தரவு பிறப்பிக்க, அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022 - ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

மா.உ.நீ, இரணியல்.

**<u>வரைவு/ சீரான உத்தரவு</u>**

வ.வி.எண்.4/2022

இன்

அசல் வழக்கு எண்.28/2022

தேதி 15.11.2022